## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் நிறுவுதல் தொடர்பான 2012 பெப்ரவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் 2014 யூன் 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொதுத்திறைசேரி மற்றும் நிதி மற்றும் கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் முறையான அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் தேசிய வியாபார முகாமைத்துவக்கல்லூரி, தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் பட்டப்படிப்பு கற்கைநெறிகளை நடாத்துவதற்காக நிறுவப்பட்டிருந்ததுடன் தேசிய வியாபார முகாமைத்துவ கல்லூரியின் துணை வேந்தரினால் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து விலகுவதற்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு 2021 ஏப்ரல் 30 ஆந் திகதிய கடிதத்தில் செய்யப்பட்டிருந்த கோரிக்கையின் பிரகாரம் தேசிய வியாபார முகாமைத்துவக்கல்லூரி தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் முழுமையான மேற்பார்வைக்கு உட்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தினால் அதன் பணிப்பாளர் சபைக்காக இரண்டு உறுப்பினர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அனைத்து பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போதும் அதன் நடவடிக்கைகள், முன்னேற்றம் மற்றும் எடுக்கப்படுகின்ற முடிவுகள் அப்பிரதிநிதிகளின் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. இதுவரை 02 நிறுவனங்களுக்கிடையிலான நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | மேற்பார்வை நடவடிக்கைகள் குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் தேசிய வியாபார முகாமைத்துவக்கல்லூரி நல்லறிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தேர்வில் தோல்வியடைந்தமையால் நிறுவகத்தினால் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 800,000,000 இற்கான ஈவுத்தொகை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2017 ஆம் வருடம் தொடக்கம் 2021 ஆம் வருடம் வரை தேசிய வியாபார முகாமைத்துவக் கல்லூரியினால் பொதுத்திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 739,618,042 ஆன தொகையொன்று ஊக்குவிப்பு படியாக செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தேசிய வியாபார முகாமைத்துவக்கல்லூரி நல்லறிவு தொடர்பான தேர்வில் தோல்வியடைந்துள்ளபோது அவ்வாறான தொகையொன்று ஊக்குவிப்புப் படியாக செலுத்துவது அதன் எதிர்காலத் தொடர்ந்தியங்கும் தன்மையை மோசமாகப் பாதிக்கும் என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | நல்லறிவு தொடர்பான தேர்வில் தேசிய வியாபார முகாமைத்துவக்கல்லூரி ஈவுத்தொகை செலுத்தக்கூடிய நிலைமையில் காணப்படவில்லை என்பதை குறிப்பிட்டுக் காட்ட முடிகின்றது. இவ்விடயம் தொடர்பாக தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. | வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவக் கல்லூரியினால் ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்ட போது தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான கவனம் கோரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |